தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1970 மார்ச் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Nationalised text books.

*389 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether nationalised text books are to be sold through co-operatives in this State in future?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1970-71-ஆம் கல்வி ஆண்டி லிருந்து, தனிப்பட்ட பிறவிற்பனையாளர்களுடன், கூட்டுறவுச் சிறப்பு அங்காடி களும், தங்களது ஒப்பந்தப்புள்ளி விவரங்களை அனுப்ப அனுமதிக்கப் பட்டுள்ளது. அவர்களது ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக இருப்பின், அவர்களை விற்பனையாளர்களாக நியமனம் செய்ய முடியும்.

திரு. கே. விநாயகம்: தேசியமயமாக்கப்பட்ட புத்தகங்களில் பல தவறுகள் நம்மையும் அறியாமலேயே புகுத்தப்படுகின்றன என்று சொல்லப்படுகிற புகார்கள் இப்போது நீக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட புகார்கள் எது வும் குறிப்பிட்ட முறையில் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வில்லை. அப்படிக் கொண்டுவரப்பட்டால், அதுபற்றி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: எவ்வளவு ஆண்டுகளுக்குள்ளாக இந்தப் புத்த கங்கள் எல்லாம் தேசியமயமாக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போதுதான் அதற்கான டெக்ஸ்ட் புக்ஸ் கார்ப்பரேஷன் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு மூன்றாவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்பு வரை உள்ள கணக்குப் புத்தகங்களை தேசியமயமாக்கயிருக்கிறோம். ஒன்பது, பத்து, வகுப்புகளுக் குள்ள ஆங்கில, தமிழ் பாடப் புத்தகங்களை அடுத்த ஆண்டு வெளியிடுவதாக இருக்கிறோம். அச்சடிப்பதற்கான வாய்ப்பு வசதிகளைப் பொறுத்து அடுத்த ஆண்டு எவை எவற்றை எடுத்துக் கொள்ளலாம் என்ற வகையில் முடிவு செய்யப்படும். எல்லாப் புத்தகங்களையும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக தேசியமயமாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் முயற்சிகளை மேற்கொண்டு வரு

கிறோம். அதற்காக ஒரு பெரிய அச்சகம் நிறுவ முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த அச்சகம் நிறுவப்பட்டால் மிக விரைவில் இந்தப் புத்தகங்கள் எல்லாம் வந்துவிடும்.

திரு. டி. மார்டின் : சென்னையில் சில பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களை அந்தப் பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்று லாபநோக்கோடு இல்லாமல் பள்ளிக்கூடத்தில் ஸ்டோர் வைத்துக் கொடுக்கிறார்கள். இதற்கும் சேல்ஸ் டாக்ஸ் கட்ட வேண்டுமென்று சேல்ஸ டாக்ஸ் அதிகாரிகள் அவர்களை, தொந்தரவுபடுத்தி வருகிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற குறிப்புகள் என்னிடம் இல்லை. அதுபற்றிய குறிப்புகளை அனுப்பி வைப்பார்களேயானல் அதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திருமதி வி. ப. பழனியம்மாள் : இப்படிப் புத்தகங்களை தேசியமயமாக்குவது அரசினர் பள்ளிகளில் மட்டுமா அல்லது தனியார் பள்ளிகளுக்கும் கூடவா ? மேலும் இந்தப் புத்தகங்கள் மலிவுப் பதிப்பில் வெளியிடப்படுமா அல்லது எப்போதும் போல் வெளியிடப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: புத்தகங்களை தேசியமயமாக்குவது எல்லாப் பள்ளிகளுக்கும்தான். அதில் அரசாங்கப் பள்ளிகள் தனியார் துறை பள்ளிகள் என்று பிரித்து வைப்பதற்கில்லை. கூடுமானவரையில் அவற்றை அடக்க விலையில் தரவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இருக்கிறோம். அப்படியே ஓரளவிற்கு இலாபம் வைத்தாலும் அதில் வருகிற லாபத்தை மதிய உணவுத் திட்டம் போன்ற வகைகளில் கல்வித் துறைக்கே பயன்படுத்துகிற நோக்கத்தின் அடிப்படையில்தான் இருக்கிறது. விலை பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. கூடுமான வரைக்கும் அடக்க விலைக்கே தர வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : ஏற்கனவே தனியார் துறை பள்ளிகளுக்காக பாட நூல்களை எழுதி வரும் அனுபவம் உள்ளவர்களுக்கு அரசாங்கப் பாட நூல்களை எழுதுவதற்கு வாய்ப்புத்தரப்படுமா ? அப்படி பாட நூல்கள் எழுவதற்குத் தரப்படும் ஊதியம் தனியார் துறையில் கொடுத்து வந்ததை விட குறையாமல் இருக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே பாடநூல்களை எழுதி பழக்கப்பட்ட ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிற முறையில்தான் இப்போது தேர்ந்தெடுத்துவரப்படுகிறது. வேறு யாரையும் கொண்டு எழுத முடியாது. ஏனெனில் ஒவ்வொரு துறையிலும் அனுபவம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்து இரண்டு மூன்று புத்தகங்கள் என்ற அளவில் ஒரு வகையில் இரண்டு இரண்டு புத்தகங்கள் போடும்படிச் சொல்லியிருக்கிறோம். அதில் நான்கு ஆதர்களிடம் எழுதச் சொல்லி இரண்டைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அரசாங்கம் கொடுக்கிற கட்டணம் தனியார் துறையில் கொடுப்பதைவிட அதிகமாகத்தான் இருக்கும்.

1970 மார்ச் 16]

THIRU K. S. KOTHANDARAMIAH: With regard to the text-books for the students of linguistic minorities, may I know what arrangements have been made in that direction?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய குறிப்பு இல்லை. ஒருசில பள்ளிகளில் அதை தேசியமயமாக்கி நாம் புத்தகங்கள் வெளியிடுகிற நிலை வருமா என்று தெரியவில்லை. ஆனால் ஆந்திராவிலிருந்து வெளியிடப் படுகிற அந்தப் புத்தகங்களை இங்கு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்தச் செயலை எளிதாக ஆக்கலாம். அதுபற்றிய தன்மைகளை ஆராய வேண்டும்.

பள்ளித் துணை இன்ஸ்பெக்டர்கள் அலுவலகங்கள்

* 390 வினா—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பத்திலிருக்க வேண்டிய பள்ளித் துணை ஆய்வாளர் அலுவல கத்தை கடலூரிலிருந்து நெல்லிக்குப்பத்திற்கு மாற்ற அரசாங்க உத்தேசித் துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த விஷயம் அரசாங்க பரிசீ லனையிலிருக்கிறது.

* 391வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள பொன்னமராவதியில் பள்ளித்துணை ஆய்வர் (Deputy Inspector) அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: பொன்னமராவதிப் பகுதியில் ஏறக்குறைய 87 தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகள் இருப்பதனால் அங்கு ஒரு பள்ளிக்கூட துணை ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றித்தான் இப்போது இல்லை என்று விடையிறுத்தேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தைபும் ஒவ் வொரு ரேஞ்சாக அமைத்து அதற்கு ஒரு டெப்டி இன்ஸ்பெக்டர் நியமிக்க வேண்டுமென்ற கருத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. 344 துணை ஆய்வா ளர்கள் இருந்து வருகிறார்கள். 374 ஒன்றியங்கள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு துணை ஆய்வாளர் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு அரசு அதை நடைமுறைப்படுத்துகிற நிலை இருந்து வரு கிறது. திருமயம் ஒன்றியத்தில் 68-ம் அறிமளத்தில் 62 பள்ளிகளும் இருக் கின்றன. இதில் ஒரு ஜூனியர் டெப்டி இன்ஸ்பெக்டர் இருந்து வருகிறார். பொன்னமராவதி ஒன்றியத்தில் ஒரு துணை ஆய்வாளரை ஏற்படுத்த வேண்டு மென்ற குறிப்பு இயக்குனரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. திருப்பற்றுக்